பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

02 09 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று செமிகான் இந்தியா-2025 கருத்தரங்கை தொடங்கி வைக்கிறார்.
- பிரதமரின் சீன பயணம், அந்நாட்டுடனான இந்தியாவின் நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் அஇஅதிமுக ஆட்சி அமைந்ததும் எய்ம்ஸ் மருத்துவமனை திறக்கப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் ஏற்கனவே இயங்கும் நிறுவனங்களோடு, ஜெர்மனிக்கு சென்று ஒப்பந்தம் செய்திருப்பது முதலமைச்சரின் நாடகம் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.
- ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா 15-0 என்ற கோல் கணக்கில் கஜகஸ்தானை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று செமிகான் இந்தியா-2025 கருத்தரங்கை தொடங்கி வைக்கிறார்.

மூன்று நாட்கள் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் நீடித்த செமிகண்டக்டர் சூழலியல் நடைமுறை, இந்தத் துறையில் அதிகரித்து வரும் முன்னேற்றங்கள் போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன.

செமிகண்டக்டர் இந்தியா திட்டத்தின் முன்னேற்றம், உற்பத்தி, இந்தத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள், மாநில அளவில் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்டவை தொடர்பான அமர்வுகள் நடைபெற உள்ளன.

48 நாடுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்கிறார்கள்.

நாளை நடைபெற உள்ள செமிகண்டக்டர் தொடர்பான தலைமைச் செயல் அதிகாரிகளின் வட்டமேஜை நிகழ்விலும் பிரதமர் பங்கேற்கிறார்.

<<<<>>>>

பிரதமரின் வளர்ச்சியடைந்த இந்தியா திட்டம் வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கத்தில் கொண்டுவரப்பட்டுள்ள முயற்சி என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் குறித்து மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவின் கட்டுரையை பிரதமர் தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பூகோள அடிப்படையில் வளர்ந்த இந்தியாவுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின் நோக்கங்களை பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் வரும் 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிச் செல்லும் வகையில் முன்னேற்றம் ஏற்படும் என்று திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சீன பயணம், அந்நாட்டுடனான இந்தியாவின் நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து புதுதில்லியில் கருத்து தெரிவித்துள்ள திரு. ராஜ்நாத் சிங், உலக அரங்கில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பிரதமரின் பயணம் அமைந்ததாகவும், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பிரதமரின் உரை குறிப்பிடத்தக்க வகையில் அமைந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஜெர்மனியின் Dusseldorf நகரில் அமைந்துள்ள “Classic Remise” என்ற அரிய கார்களுக்கான மையத்தினை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நேற்று பார்வையிட்டார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், அரிய கார்களுக்கன மையத்தினூடே நடந்து செல்வது பழைய காலத்திற்கே பயணித்து சென்றதுபோன்ற உணர்வைத் தந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் டெட்ராய்ட் ஆக திகழும் சென்னையில் இருந்து ஆட்டோமொபைல் துறையில் புதுமைகளைப் புகுத்தும் பெருமைக்குரிய மரபைக் கொண்ட ஜெர்மனிக்குச் சென்று உலகின், முதல் கார், பந்தயக் கார் போன்றவற்றை அருகில் பார்த்து மகிழ்ச்சியடைந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

வரலாறு மீண்டும் உயிர் பெற்றதைப்போல் இருந்ததாகவும், கடந்த காலத்தில் அறிவுக்கும், எதிர்காலத்திற்குமான கற்பனைக்கும் இடையெ நடைபெறும் உரையாடலை உணர்ந்ததாகவும் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஏற்கனவே இயங்கும் நிறுவனங்களோடு, ஜெர்மனிக்கு சென்று ஒப்பந்தம் செய்திருப்பது முதலமைச்சரின் நாடகம் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணங்களின் உண்மை நோக்கம் என்ற என்று வினவியுள்ளார்.

ஜெர்மனியில் மூன்று நிறுவனங்களுடன் மூவாயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதாக தெரிவித்துள்ள நிலையில், அந்த நிறுவனங்கள் பல வருடங்களாக தமிழகத்தில் இயங்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சரின் அறையிலேயே முடித்திருக்க வேண்டிய இந்த ஒப்பந்தத்திற்காக 10 நாள் ஐரோப்பிய பயணம் எதற்கு என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் அஇஅதிமுக ஆட்சி அமைந்ததும் எய்ம்ஸ் மருத்துவமனைப் பணிகள் முடிக்கப்பட்டு திறக்கப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே குன்றத்தூரில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், மறைந்த முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வைத்த கோரிக்கையின் அடிப்படையிலேயே எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் அடிக்கல் நாட்டியதாக கூறினார்.

ஆனால் திமுக அரசு அந்த மருத்துவமனையை அழுத்தம் கொடுத்து பணிகளை முடிக்க தவறிவிட்டதாக குறை கூறிய அவர், அஇஅதிமுக அரசு அமைந்ததும் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு அந்த மருத்துவமனை திறக்கப்படும் என்றார்.

<<<<>>>>

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணி கருத்துக்கணிப்புகளைத் தாண்டி அதிக இடங்களில் வெற்றி பெறும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக தலைமையிலான கூட்டணி வலிமையாக உள்ளது என்று கூறினார்.

காங்கிரஸ் கட்சி போட்டியிடும் தொகுதிகள் குறித்து தேர்தல் நேரத்தில் கட்சி மேலிடத்தின் அறிவுறுத்தலின்படி செயல்படுவோம் என்றும் திரு. செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

<<<<>>>>

கர்நாடக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக ஒகேனக்கல் காவிரியாற்றுக்கு வரும் தண்ணீரின் அளவு 43 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

இதனால் அருவிகளில் குளிப்பதற்கும், பரிசல் இயக்குவதற்கும் தொடர்ந்து தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

விழுப்புரம்-முண்டியம்பாக்கம் ரயில் நிலையங்களுக்கிடையே பராமரிப்பு பணி காரணமாக இன்று தொடங்கி பல்வேறு நாட்களில் தாம்பரம்-விழுப்புரம் பயணிகள் ரயில் சேவை பகுதியளவு ரத்து செய்யப்பட்டுள்ளது.

அதன்படி இன்றும், வரும் 6, 9, 13, 20 மற்றும் 27ஆம் தேதிகளில் தாம்பரத்தில் இருந்து காலை மணி 9.45க்கு புறப்படும் பயணிகள் ரயில் முண்டியம்பாக்கம் வரை மட்டுமே இயக்கப்படும்.

இதேபோல் மறுமார்கத்தில் விழுப்புரத்தில் இருந்து மணி 1.40க்கு புறப்படும், பயணிகள் ரயில் இந்த நாட்களில் முண்டியம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இந்தியா உடனான வர்த்தக உறவு பல ஆண்டுகளாக ஒருதலைப் பட்சமாகவே நீடித்து வருவதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆஃப்கனிஸ்தானில் நேற்று ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 812ஆக அதிகரித்துள்ளது.

<<<<>>>>

சிங்கப்பூர் பிரதமர் திரு. Lawrence Wong மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

<<<<>>>>

தலைநகர் தில்லியில் நேற்று பெய்த கனமழை காரணமாக தில்லி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் தண்ணீர் தேங்கியதால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. இன்றும் மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கர்நாடகாவின் யாத்கிர் மாவட்டத்தில் கனமழை காரணமாக கிருஷ்ணா நதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 187 ஆடுகள் அடித்துச் செல்லப்பட்டன.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தில் செயல்படும் தனியார் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு மாணவ-மாணவிகள் பங்கேற்ற திருவாதிரை நடனம் நடைபெற்றது.

<<<<>>>>

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பொது இடங்களில் வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 519 விநாயகர் சிலைகள்,

பட்டினப்பாக்கம் உள்ளிட்ட 4 இடங்களில் உரிய பாதுகாப்புடன் அமைதியான முறையில் கரைக்கப்பட்டதாக மாநகர காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

அரியலூர் மாவட்டம் கீழப்பழுவூரில் உள்ள திரௌபதி அம்மன் கோவிலில் நடைபெற்ற தீமிதி விழாவில் ஆயிரக்கணக்கானோர் சாமி தரிசனம் செய்தனர்.

**<<<<>>>>**

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி வழங்கினார்.

**<<<<>>>>**

மயிலாடுதுறையில் நடைபெற்ற எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

**<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா 15-0 என்ற கோல் கணக்கில் கஜகஸ்தானை வென்றது.

பீஹார் மாநிலம் ராஜ்கிரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணியின் அபிஷேக் ஹாட்ரிக் கோல் அடித்தார்.

இந்தப் போட்டியில் இந்தியா ஏற்கனவே சூப்பர்-4 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

<<<<>>>>

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி - நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-1, 7-5 என்ற செட் கணக்கில் ஈக்வடாரின் Gonzalo Escobar - மெக்சிகோவின் Reyes Varela இணையை வென்றது.

<<<<>>>>

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

Baoji நகரில் நடைபெற உள்ள இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் Tanya Hemanth, Ishita Negi, Jinpaul Sona உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

16 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கூடைப்பந்துப் போட்டியில் இந்தியா இன்று பஹ்ரைனை எதிர்கொள்கிறது.

உல்லன்பட்டரில் இப்போட்டி காலை மணி 11.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>